**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி - 03 - 2021**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 03 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348/3349 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைசசாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க சேவைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன நிகழ்ச்சித்திட்டத்தின அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. 29.4 கிலோமீற்றருடைய கழிவு நீர் வலையமைப்பை இடுவதற்கு மற்றும் மூன்று உந்தி நிலையங்களை நிர்மாணித்தல் உள்ளடங்கலாக தெற்கு நீர்பிடிப்பு பகுதியின் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் மற்றும் சேவைகள் வழங்குனரின் நிறுவன வியூகத்தையும் திறன் மேம்பாட்டையும் பலப்படுத்தல் இதன் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,401.76 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 112.83 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,471.16 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92.29 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 2,930.60 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 20.54 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்வதற்கு எதிர்பாாக்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி 2022 ஒக்தோபர் 24 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

நிகழ்ச்சித்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு. | வழிகாட்டல் குழு குறைந்தது இரு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும். இருப்பினும் 2021 ஆம் ஆண்டிற்குள் இரண்டு வழிகாட்டல் குழு கூட்டங்கள் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. | சுகாதார அதிகாரசபைகளால் அமுல்படுத்தப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கி கூட்டமொன்றை ஏற்பாடு செய்வது கடினமாகவிருந்தது. | மாற்றுவழியாக நிகழ்நிலை கூட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் | அடையப்பட்ட செயன்முன்னேற்றம். | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| (அ) கிருலப்பனை நீர்பிடிப்பு பகுதிக்கு புதிய ஈர்ப்பு கழிவுநீர் வேக பிரதானிகள் மற்றும் பம்ப் நிலையங்களை வழங்குதல். | 100 | 67 | நிகழ்ச்சித்திட்டம் 2017 மே 18 இல் ஆரம்பிப்பதற்கும் 2020 மே 14 இல் பூர்த்தியடைவதற்கும் பட்டியலிடப்பட்ட போதும் ஒப்பந்தம் 2022 யூலை 30 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஒப்பந்தமானது இரண்டு வருடங்களாக தாமதமானது. | ஒப்பந்தகாரரின் மெதுவான பௌதீக செயன்முறை, தேவையான வளங்களை தவறாகப் பயன்படுத்தல், மந்தமான திட்டமிடல் மற்றும் முறையான மேற்பார்வையின்மை, கொள்கை தீர்மானம் எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் போன்றன தாமதத்திற்கான காரணங்களாகவிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) வெள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல் | 100 | 5 | வெள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல் ஒப்பந்தமானது 2017 யூன் 21 இல் ஆரம்பிப்பதற்கும் 2019 திசெம்பர் 14 இல் பூர்த்தியடைவதற்கும் பட்டியலிடப்பட்ட போதும் ஒப்பந்தம் 30 மாதங்கள் காலதாமதத்துடன் 2020 திசெம்பர் 18 இல் வழங்கப்பட்டிருந்தது. | (i)2021 ஒக்தோபர் 21 இல் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை மற்றும் ஏற்றுக்கொள்ளல் கடிதத்தின் பிரகாரம் காணியானது மூன்று மாதங்களுக்குள் நிர்மாண வேலைக்கான ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட வேண்டியுள்ளது. எனினும் இது 2021 திசெம்பர் 31 வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) கொழும்பு மாநகரசபையிலுள்ள ருத்ரா அரங்கு இந்த நோக்கத்திற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2009 செப்தெம்பர் 28 இன் 543 ஆம் இலக்க தீர்வின் பிரகாரம் அனுமதி வழங்கப்பட்டது. கொழும்பு மாநகர சபையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரருக்கு காணியை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கிருல - நாரஹேனபிட்ட பகுதிக்கு கழிவுநீர் வசதிகளை வழங்குதல். | 100 | முன் ஒப்பந்தகாரரின் கட்டத்தின் 75 | ஒப்பந்தமானது 2017 ஒக்தோபர் 23 இல் ஆரம்பிப்பதற்கும் 2020 ஏப்ரல் 10 இல் பூர்த்தியடைவதற்கும் பட்டியலிடப்பட்ட போதும் ஒப்பந்தம் 2021 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்டிருந்தது. | (i) 30 வருடங்களிற்கான காணியின் ஒட்டுமொத்த குத்தகைப் பெறுமதி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தபோதும் முறையான குத்தகை உடன்படிக்கையானது 2022 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.<br>(ii) புகையிரத திணைக்களத்திடமிருந்து குத்தகைக்கு பெறப்பட்ட காணியில் வாழுகின்ற 6 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக ரூபா 30,060,000 செலுத்தப்பட்டிருந்த போதும் அந்தக் குடும்பங்கள் காணியிலிருந்து 2021 திசெம்பர் 31 வரையிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) தெற்கு நீர்பிடிப்பு பகுதியின் குறைபாடுள்ள கழிவுநீர்களை பழுதுபார்த்தல் மற்றும் செயற்படுத்துதல். | 100 | முன் ஒப்பந்தகாரரின் கட்டம் 75 | ஒப்பந்தமானது 2019 நவம்பர் 01 இல் ஆரம்பிப்பதற்கும் 2021 திசெம்பர் 05 இல் பூர்த்தியடைவதற்கும் பட்டியலிடப்பட்ட போதும் ஒப்பந்தம் 2021 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்டிருந்தது. | கொள்கை மட்டத்தில் ஆகக்குறைந்த முன்னுரிமை மற்றும் ஒப்பந்தத்தின் நோக்கெல்லை கொள்கைமட்டத்தில் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) நிதி முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு முறைமை (எவ்எம்ஏஎஸ்) | 100 | 100 | கழிவகற்றல் பிரிவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கழிவகற்றல் பிரிவிற்கு அறிமுகம்செய்யப்பட்ட ரூபா 3,159,879 பெறுமதியான நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறைமை 2017 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தது. | (i) இந்தப் பொதிக்கான பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு முறையாக வழங்கப்பட்டிருக்காததுடன் எந்தக் கணனி மீது முறைமை பொருத்தப்பட்டிருந்தது என்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) இந்தப் பொதியை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது பொதியானது பொருத்தப்பட்ட பின்னர் 3 வருடங்கள் காலப்பகுதிக்கு உத்தரவாதம் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு இந்தக் பொதியினை கொள்வனவு செய்யும்போது பிரேரித்திருந்தது. எனினும், இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு சான்றெதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**முகாமைத்துவத்தின் பதில்** ஒப்பந்தகாரருக்கு தளங்களை கையளித்தல் மற்றும் ஒப்பந்தகாரரின் மந்தமான செயலாற்றல் போன்றன ஒப்பந்த காலப்பகுதியினுள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதில் காலதாமதத்தை ஏற்படுத்தியது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்டத்தின் காலம் காலாவதியாகுவதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

## 3.2 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | 2017 மே 15 இலிருந்து 2020 நவம்பர் 15 வரைக்கும் ஓசீஆர் கடனின் மீளளிக்கப்படாத கடன் மீதி மீது கடப்பாட்டு கட்டணங்களாக ரூபா 151 மில்லியனை பொதுத்திறைசேரி செலுத்தியிருந்தது. | மூல கடன் காலப்பகுதியில் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் கடப்பாட்டுக் கட்டணத்தின் கிரயம் தவிர்க்க முடியாததொன்றாகவிருந்தது. | முறையான செயற்திட்ட திட்டமிடல் ஊடாக இந்தக் கிரயம் குறைக்கப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் 2016 நவம்பர் 3 இல் ஆரம்பிப்பதற்கும் 2020 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்படுவதற்கும் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவுத்திகதி செயற்திட்டத்தின் மந்தமான செயன்முன்னேற்றம் காரணமாக 2022 ஒக்தோபர் 24 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மந்தமான செயன்முன்னேற்றம் காரணமாக நீடிக்கப்பட வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தின் காலம் காலாவதியாகுவதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் முடிவடைந்ததிலிருந்து 2021 திசெம்பர் 31 அளவில் கிட்டத்தட்ட 12 மாதங்கள் காலதாமதமாகியிருந்த போதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்கை உதவிக்குழுவிற்கு ரூபா 41.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு கொள்கை உதவிக் குழுவிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கும் அதனுடைய செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கும் செயற்திறனாக பங்களிக்க வேண்டும். |